## 3 சிறுவினா

**1. சிற்பத் தொழிலுக்குரிய உறுப்புகள் யாவை?**

- கல்
- உலோகம்
- செங்கல்
- மரம்
- சுதை(சுண்ணாம்பு)
- தந்தம்
- வண்ணம்
- கண்ட சருக்கரை
- மண்
- மெழுகு

**2. சோழர் காலச் சிற்பங்களின் கருவூலங்களாகத் திகழ்கின்றவை எவை?**

- முதலாம் இராசராசன் கட்டிய தஞ்சைப் பெரிய கோவில்.
- முதலாம் இராசேந்திர சோழன் எழுப்பிய கங்கை கொண்ட சோழபுரம்.
- இரண்டாம் இராசராச சோழன் எழுப்பிய தாராசுரம் ஐராதீசுவரர் கோவில்.
- இரண்டாம் குலோத்துங்கச் சோழன் அமைத்த திரிபுவன வீரேசுவரம் கோவில்
  -போன்றன சோழர்காலச் சிற்பங்களின் கருவூலங்களாகத் திகழ்கின்றவை ஆகும்.

**3. மாமல்லபுரச் சிற்பங்கள் பற்றி எழுதுக.**

- சிற்பக்கலைக்கு மாமல்லபுரச் சிற்பங்கள் மிகச்சிறந்த சான்று.
- கடற்கரையில் உள்ள பெரும்பாறைகளைச் செதுக்கிப் பற்பல உருவங்கள் அமைக்கப் பட்டுள்ளன.
- பஞ்சபாண்டவர் இரதங்களில் அழகிய சிற்பங்கள் காணப்படுகின்றன.
- பறவைகள், விலங்குகள், ஆகியவற்றின் பல்வேறு உருவச் சிற்பங்களும் காணப்படுகின்றன.

**4. நாயக்கர் காலச்சிற்பங்கள் பற்றி எழுதுக.**

- நாயக்கர் மன்னர்கள் சிற்ப வேலைப்பாடுடன் ஆயிரங்கால் மண்டபத்தை அமைத்தனர். மதுரை மீனாட்சி அம்மன் கோவில் ஆயிரம் கால் மண்டபத்து தூண்களில் கண்ணப்பர், குறவன், குறத்தி, ஆடை அணிகலன்களுடன் கூடிய அரிச்சந்திரன், சந்திரமதி சிற்பங்கள் ஆகியவற்றில் ஆடை ஆபரணங்கள் கலைநயத்துடன் காணப்படுகின்றன. இறந்த மைந்தனைக் கையில் ஏந்தியபடி சந்திரமதி சிற்பங்கள் நயம் மிக்கது.
- கோவைக்கு அண்மையில் உள்ள பேரூர் சிவன் கோவிலில் உள்ள சிற்பங்கள் நாயக்கர் காலச் சிற்பக் கலைநுட்பத்தின் உச்சநிலைப் படைப்பு எனலாம்.
- விழியோட்டம், புருவ நெளிவு, நகஅமைப்பு என மிகமிக நுட்பமாகக் கலைநயத்துடன் அவை அமைக்கப்பட்டுள்ளன.
- கிருஷ்ணாபுரம் வேங்கடாசலபதி கோவிலில் உள்ள குறவன் குறத்தி, இரதிதேவி சிலைகள் காண்போரை ஈர்க்கும் வகையில் உள்ளன.

5. **விஜய நகர மன்னர் காலச்சிற்பங்கள் குறித்தெழுதுக.**

- விஜய நகர மன்னர்கள் காலத்தில் மிக உயர்ந்த கோபுரங்கள் சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டன .
- அக்கோபுரங்களில் சுதைகளால் ஆன சிற்பங்கள் மிகுதியாக உள்ளன.
- தெலுங்கு, கன்னடப் பகுதிகளுடன் தொடர்புகொண்டிருந்த காரணத்தால் அந்நாட்டுச் சிற்பக்கலையின் தாக்கம் தமிழகச் சிற்பங்களில் ஏற்பட்டது.
- கோவில் மண்டபங்களில் மிகுதியான சிற்பத்தூண்கள் அமைக்கப்பட்டன.
- குதிரையின் உருவங்களைச் சிற்பங்களில் இடம்பெறச் செய்தனர்.
- வீரர்கள் அமர்ந்த நிலையில் குதிரைகள் முன்னங்கால்களைத் தூக்கி நிற்பது போன்ற சிற்பங்கள் மண்டபத்தூண்களில் அமைத்தனர்.
- பல்வேறு ஓசைகளை எழுப்பும் இசைக் கற்றூண்களையும் அமைத்தனர்.

6. **பௌத்த - சமணச் சிற்பங்கள் குறித்து எழுதுக.**

- பௌத்த மதத்தைத் தழுவிய தமிழர்கள் புத்தரின் உருவத்தை அமர்ந்த, நின்ற, படுத்த நிலைகளில் சிற்பங்களாகப் படைத்து வழிபட்டனர்.
- சமண மதத்தினர் அருகக் கடவுளின் உருவத்தையும், 24 தீர்த்தங்கரர் உருவங்களையும் சிற்பங்களாக்கியுள்ளனர்.
- சமண மதத்தில் சிற்பங்கள் அளவுக்கு மீறிய உயரமும், பருமனும் உடையவையாக உள்ளன.
- திருநாதர் குன்று என்னும் இடத்தில், ஒரு பாறையில் 24 தீர்த்தங்கரர் உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன.
- மதுரைக்கு அண்மையில் சமணர் படுக்கைகள் செதுக்கப்பட்ட இடங்களிலும் மலைப்பறைகளிலும் சமணச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

## 4 நெடுவினா

1. **தமிழக அரசு சிற்பக்கலைக்கு ஆற்றிவரும் பணிகள் குறித்துத் தொகுத்து எழுதுக.**

- சிற்பக்கலைஞர்களைப் பரிசளித்துப் பாராட்டிச் சிற்பக்கலையை வளர்த்து வருகின்றது.
- மாமல்லபுரத்தில் தமிழக அரசு சிற்பக் கல்லூரியை நடத்தி வருகின்றது.
- சுவாமி மலை, கும்பகோணம், மதுரை ஆகிய இடங்களில் உலோகப் படிமங்கள் செய்யும் பயிற்சி நிலையங்கள் அமைந்துள்ளன.
- சென்னை மற்றும் கும்பகோணத்தில் உள்ள அரசு கவின்கலைக் கல்லூரிகளில் சிற்பக்கலை பயிலலாம்.
- 'சிற்பச் செந்நூல்' சிற்பக்கலை பற்றியது. சிற்பக்கலை பற்றிய செய்திகளை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் தமிழ்நாடு தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் இந்நூலை வெளியிட்டுள்ளது.

2. **இன்றைய சிற்பக்கலை குறித்து எழுதுக.**

- தமிழகத்தில் கட்டப்படும் கோவில்களில் இன்றும் சுதைச்சிற்பங்கள், கற்சிற்பங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.
- செங்கல், பைஞ்சுதை, கற்கள் ஆகியவற்றைக் கொண்டு கலைநயமிக்க சிற்பங்கள் உருவாக்கப்படுகின்றன.

- வெண்கல உலோகம் மற்றும் செயற்கை இழைகளாலும் கடவுள் உருவங்களும் மனித உருவங்களும் உருவாக்கப்படுகின்றன.
- இன்றைய சிற்பக்கலை கோவில்களைக் கடந்தும் பல துறைகளில் தன் இடத்தை நிறைவு செய்கிறது.
- பெரும் அரங்குகளில், காட்சிக் கூடங்களில் வரவேற்பறைகளில் காணப்படுகின்ற கலை நயம் மிக்க சிற்பங்கள், நினைவுப் பொருட்கள், பரிசுப்பொருட்கள். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் நேர்த்தி மிகு சிற்பங்கள் முதலானவை தமிழர் சிற்பக்கலையின் மேன்மையை உலகுக்குப் பறைசாற்றுகின்றன.